Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**7 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பன்னீர் செல்வம் |
| Father/Husband Name | : | மீனாட்சி சுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் குமரையா கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் கார் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் எனக்கு மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 05.03.2021 ம் தேதி மாலை 04.30 – 05.00 மணிக்குள் கேணிக்கரையிலிருந்து முருகன் கோவில் வழியாக வந்து கொண்டிருந்தபோது அண்ணாசிலை ஆட்டோ ஸ்டாண்டிற்கு அருகில் கூ கூ என சத்தம் கேட்டது. அப்போது நான் அங்கு சென்றேன். ஆஜர் எதிரிகள் 3 பேரும் ஒரு நபரை அடித்துக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டு சென்றுவிட்டேன். பின்பு எதிரிகள் 3 பேரும் ஒரு ஆட்டோவில் ஏறி வண்டிக்காரத் தெருப்பக்கம் சென்றுவிட்டார்கள். சிறிது நேரம் கழித்து எனது மைத்துனர் பனையடியான் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன் பிறகு நான் இராமநாதபுரம்

அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சென்று என் மைத்துனரை பார்த்தபோது அவர் இறந்தநிலையில் பிரேத சவக்கிடங்கிற்கு கொண்டு சென்றார்கள். எனது மைத்துனர் பனையடியானுக்கும் வழக்கின் 1ம் எதிரி அண்ணாமலை என்பவருக்கும் ஆட்டோ வாங்குவதில் முன்விரோதம் ஏற்பட்டு அது சம்மந்தமாக எனது மைத்துனர் பனையடியான் வீட்டிற்கு எதிரிகள் சென்றுள்ளார்கள். எனது மைத்துனர் வெளியில் சென்றுள்ளதாக என் தங்கை சுமதி என்பவர் சொல்லவே எதிரிகள் அங்கிருந்து திரும்பி வந்துவிட்டனர். இந்த விரோதத்தை எதிரிகள் 3 பேரும் மனதில் வைத்துக்கொண்டு எனது மைத்துனர் பனையடியானை கொலைசெய்து இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW**6 |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | சண்முகசுந்தரம் |
| Father/Husband Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் இராமநாதபுரம் முருகன் கோவில் அருகில் சக்தி பவர் டுல்ஸ் கடையில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியானை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. பனையடியான் எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் எனது கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது என் கடைக்கு வடக்கே

ரோட்டில் என் கடைக்கு அருகில் உள்ள ஆட்டோ மற்றும் டாடா ஏசி ஸ்டாண்டில் இவ்வழக்கில் இறந்துபோன பனைஅடியான் என்பவரை ஆஜர் 1ம் எதிரி பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் 2ம் எதிரி கஜேந்திரன் என்பவர் அருவாளால் பனைஅடியானின் தலை, கால், முதுகு ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும் 3ம் எதிரி முத்து முருகன் என்ற செந்தில்குமார் சவுக்குக்கட்டையால் பனைஅடியானை உடலில் மாறி மாறி அடித்தார் என்றும் அங்கிருந்தவர்கள் சத்தம்போட்டு விலக்கிவிடவே எதிரிகள் 3 பேரும் ஆட்டோவில் வண்டிக்காரத் தெரு சாலை வழியாக சென்றுவிட்டார்கள் என்றும் காயம்பட்ட பனைஅடியானை ஆட்டோவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் அங்கு பனைஅடியான் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C.** 153/2022
Sessions .. .. }
} Prosecution – **PW**5
Deposition of witness for } Defence –
} Court –

| | | |
|---|---|---|
| Name | : | முனியசாமி |
| Father/Husband Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் சக்கரக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இராமநாதபுரம் அண்ணா சிலை அருகில் பஞ்சர்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியானை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலிசார் என்னிடம் விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 05.00 மணியளவில்

நான் எனது கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது என் கடைக்கு வடக்கே ரோட்டில் என் கடைக்கு அருகில் உள்ள ஆட்டோ மற்றும் டாடா ஏசி ஸ்டாண்டில் இவ்வழக்கில் இறந்துபோன பனைஅடியான் என்பவரை ஆஜர் 1ம் எதிரி பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் 2ம் எதிரி கஜேந்திரன் என்பவர் அருவாளால் பனைஅடியானின் தலை, கால், முதுகு ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும் 3ம் எதிரி முத்து முருகன் என்ற செந்தில்குமார் சவுக்குக்கட்டையால் பனைஅடியானை உடலில் மாறி மாறி அடித்தார் என்றும் அங்கிருந்தவர்கள் சத்தம்போட்டு விலக்கிவிடவே எதிரிகள் 3 பேரும் ஆட்டோவில் வண்டிக்காரத் தெரு சாலை வழியாக சென்றுவிட்டார்கள் என்றும் காயம்பட்ட பனைஅடியானை ஆட்டோவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் அங்கு பனைஅடியான் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 153/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**4 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கபிலன் |
| Father/Husband Name | : | பனையடியான் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் வ.உ.சி நகரில் வசித்து வருகிறேன். நான் கீழக்கரை சதக் பாலிடெக்னிக் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் என் அப்பா ஆவார். வழக்கில் புகார் கொடுத்த ரவி எனது சித்தப்பா ஆவார். எனது சித்தப்பா ரவி என்பவர் 1 1/2 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். என் அப்பா இறப்பதற்கு முன்பு இராமநாதபுரம் அண்ணா சிலைக்கு முன்பு உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் Tata Ace வாகனத்தை வாடகைக்கு ஓட்டிவந்தார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 05.03.2021 அன்று சாயங்காலம் 04.00 மணியளவில் நானும், என் சித்தப்பா ரவி, பாலாஜி ஆகியோர்கள் எனது சித்தப்பா ரவி செட்டில் இருந்தோம். அப்போது என் சித்தப்பாவிற்கு ஒரு போன் வந்தது. அதில் என் அப்பாவிற்கும் மற்றவர்களுக்கும் சண்டை நடைபெறுகிறது என்று தகவல் வந்தவுடன்

நாங்கள் 3 பேரும் என் சித்தப்பாவின் ஸ்கூட்டியில் என் அப்பா வண்டி ஓட்டும் ஸ்டாண்டிற்கு சென்றோம். அப்போது எதிரி அண்ணாமலை என்பவர் என் அப்பாவை என்னடா தேவுடியா மகனே உன்னால் என்ன பண்ண முடியும் என்று சொல்லி எனது அப்பாவை கீழே தள்ளிவிட்டார். எதிரி கஜேந்திரன் என்பவர் கையில் அருவாளை வைத்து எனது அப்பாவின் இடதுபுற தலை, வலதுபுற முட்டிக்கு கீழ், முதுகு, வயிற்றின் இடுப்புப்பகுதியில், தொடையிலும் அருவாளை வைத்து வெட்டி காயப்படுத்தினார். எதிரி முத்து முருகன் என்பவர் கையில் வைத்திருந்த சவுக்குக்கட்டையால் என் அப்பாவின் தலை, முதுகு, கால் ஆகிய இடங்களில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். நாங்கள் 3 பேரும் எனது அப்பாவின் அருகில் சென்றபோது எதிரிகள் எங்களையும் வெட்டிவிடுவோம் என்று சொன்னதால் நாங்கள் அங்கே செல்லவில்லை. பின்பு எதிரிகள் 3 பேரும் TN 65 AJ 4942 என்ற எண் கொண்ட ஆட்டோவில் வண்டிக்காரத்தெருப்பக்கம் சென்றுவிட்டார்கள். பின்பு காயம்பட்ட என் அப்பாவை ஆட்டோவில் தூக்கிச்சென்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். சிறிது நேரத்திலேயே என் அப்பா இறந்துவிட்டார். பின்பு என் சித்தப்பா ரவி என்பவர் கேணிக்கரை காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தார். என் சித்தப்பா ரவியின் கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும். புகாரில் உள்ள கையெழுத்து என் சித்தப்பா ரவி என்பவரின் கையெழுத்து தான். புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படும் அருவாளை எதிரி கஜேந்திரன் என்பவர் என் அப்பாவை தாக்க பயன்படுத்தினார். அருவாள் சா.பொ.1. என்னிடம் காட்டப்படும் சவுக்குக்கட்டை எதிரி முத்து முருகன் சம்பவத்தின்போது என் அப்பாவை தாக்கும் போது பயன்படுத்தினார். அந்த சவுக்குக்கட்டை இதுதான். சவுக்குக்கட்டை சா.பொ.2. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.